**<u>Sub Court, Eraniel</u>**

**S.C. No.35/2025**

**Date:** 11.08.2026.

**PW 1 - திரு. Binumon Varghees**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 11.08.2026.

(A2, A4 present. A1, A3, A5 are absent. Petition U/s.355 BNSS is filed and allowed).

<u>1 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

என்னை ஆட்டோவில் ஏற்றி சென்றதாக சொல்ல பட்ட இடத்தை சுற்றி நிறைய கடைகள் வீடுகள் இருந்தது என்றால் ஆமாம். குளச்சல் முதல் மனவாளக்குறிச்சி செல்லும் பிரதான சாலையில் ரோட்டிற்கு தெற்கு பக்கத்தில் புதூர் என்ற மீனவர் கிராமம் உள்ளது என்றால், ஆமாம். அந்த மீனவர் கிராமத்தில் நிறைய வீடுகள் இருந்தது என்றால், ஆமாம். என்னை இறக்கி விட்ட புன்னை மூடு பகுதியை சுற்றிலும் நிறைய வீடுகள் இருக்கிறது என்றால் ஆமாம். ஒன்றாவது எதிரியை வழக்கு சம்பவத்திற்கு முன்பாக நான் பார்த்தது இல்லை என்றால், ஆமாம். புகாரை நான் அடுத்த நாள் காலையில் 9:00 மணிக்கு பிறகு தான் கொடுத்தேன் என்றால், ஆமாம். என் வீட்டில் இருந்து மண்டைக்காடு காவல் நிலையத்திற்கு பத்து நிமிடத்தில் சென்றுவிடலாம் என்றால், ஆமாம்.நான் காவல் நிலையத்திற்கு செல்லும் பொழுது அங்கு எதிரிகள் இருந்தார்களா இல்லையா என்றால், இல்லை.22 ஆம் தேதி காவல் நிலையத்தில் எதிரிகளைப் பிடித்ததாக சொன்னார்கள் நான் அங்கு சென்று பார்த்தேன் அவர்கள் இருந்தார்கள்.அப்போதுதான் முதல் முதலாக எதிரியை பார்க்கிறேன் என்றால் இல்லை அதற்கு முன்பு பார்த்திருக்கிறேன்.சம்பவத்திற்கு பிறகு காவல் நிலையத்தில் வைத்து தான் முதல் முறையாக எதிரிகளை பார்த்தேன் என்றால் ஆமாம். நான் எழுதிக் கொடுத்த புகாரில் எந்தெந்த

எதிரிகள் ஆட்டோவில் வந்தார்கள் என்றும் எந்தெந்த எதிரிகள் பைக்கில் வந்தார்கள் என்றும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால், சொல்லி இருக்கிறேன். தங்க சங்கிலியை பறித்து சென்றார்கள் என்பதை காண்பிக்க அந்த தங்க சங்கிலி என்னுடையது தான் என்பதை காண்பிக்க ஆவணம் எதுவும் கொடுத்தேனா என்றால், கழுத்தில் கிடந்த புகைப்படத்தை ஆய்வாளிடம் காண்பித்தேன். அதன் பிறகு என்னைக்கு என்னை போலீஸ் விசாரணைக்கு அழைத்தார்கள் என்றால் அழைத்தார்கள் தேதி ஞாபகம் இல்லை. நான் பொதுவாக இரண்டு வருடங்களுக்கு ஒரு முறை வெளிநாட்டுக்கு சென்று வருவேன் என்றால், ஆமாம். விடுமுறைக்கு வரும் பொழுது இங்கு இரண்டு மாதங்கள் தங்குவேன் என்றால், ஆமாம். எனக்கு மது அருந்தும் பழக்கம் கிடையாது.நான் விடுமுறைக்கு வரும்பொழுது மது அருந்திவிட்டு பல்வேறு இடங்களில் தகராறு செய்வது என்னுடைய வழக்கம் என்றால், இல்லை. சம்பவம் நடந்ததாக கூறப்படுகின்ற தேதியில் மதுபோதையில் மண்டைக்காடு பகுதியில் பிரச்சினை செய்தேன் என்றால், இல்லை.அந்த இடத்தில் நான் என்னுடைய பொருட்களை எல்லாம் தொலைத்து விட்டு அங்கிருந்த பொதுமக்களிடம் பிரச்சனை செய்தேன் என்றால், இல்லை. என்னுடைய வீடு லட்சுமிபுரம் கலைக் கல்லூரி முன்பாக உள்ளது. அன்றைய தினத்தில் அங்கு சுத்தி இருப்பவர்களிடம் பிரச்சனை செய்தேன் என்றால், இல்லை. அது போல் தகராறு நடந்த நேரத்தில் பின்பு வந்த 1 வது எதிரி மீது நான் பொய்யான புகார் கொடுத்தேன் என்றால், இல்லை. என்னுடைய தங்க செயினை எதிரிகள் எடுக்கவில்லை என்றாலும் அது நான் செய்த தகராரில் தொலைந்து விட்டது என்றாலும் இல்லை எடுத்தார்கள்.எனக்கும் காவல்துறையில் உள்ள சிறப்புப் பிறகு உதவி

ஆய்வாளரும் நெருங்கிய நண்பர் என்பதால் நான் அவர்களுடைய உதவி பயன்படுத்தி எதிரிகள் மீது பொய்யான புகார் கொடுத்து வழக்கு பதிவு செய்திருக்கிறேன் என்றால் இல்லை. 1வது எதிரிக்கும் இந்த வழக்குக்கும் எந்த தொடர்பும் இல்லை என்றாலும் நான் பொய்யான சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

2 மற்றும் 3 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

2 மற்றும் 3வது எதிரிகள் தரப்பில் 1வது எதிரியின் குறுக்கு விசாரணையை ஏற்று கொள்வதாக கூறுகிறார்கள்.

4 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

ஆட்டோ வைத்திருப்பவர்கள் யார் சவாரி கூப்பிட்டாலும் போவார்கள் என்றால், ஆமாம். ஆட்டோ டிரைவரை தெரியும் அவர் ஆட்டோ ஓட்டும் போதும் பேசவில்லை என்றால், ஞாபகம் இல்லை. சம்பவம் நடந்த இடத்திற்கும் காவல் நிலையத்திற்கும் இடையே 500 மீட்டர் தூரம் இருக்கும் என்றால், பக்கம் தான். நான் உடனடியாக காவல் நிலையத்திற்கு சென்று சொன்னேன் என்றால் இல்லை. எதற்காக உடனடியாக காவல் நிலையத்திற்கு செல்லவில்லை என்றால் அடித்தார்கள் பயமாக இருந்தது அதனால் செல்லவில்லை. குற்ற சம்பவம் நடந்தால் உடனடியாக காவல் நிலையத்திற்கு தகவல் தெரிவிக்க வேண்டும் என்ற விவர்ம் எனக்கு தெரியும் என்றால் ஆமாம்.

எதற்காக உடனடியாக புகார் கொடுக்கவில்லை என்றால் நான் வீட்டுக்கு சென்று விட்டேன். சம்பவத்திற்கும் 4 வது எதிரிக்கும் சம்பந்தமில்லை என்றாலும் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் இல்லை.

5 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

புகார் மனுவில் எனது நண்பரின் பெயர் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சொல்லியிருக்கிறேன். புகாரில் நான் எங்கு சென்று வருகிறேன் என்று சொல்லவில்லை என்றால், குளச்சலில் இருந்து மண்டைகாடு வரும்போது என்று உள்ளது. காவல் நிலையத்தில் புகார் மனு எப்போது கொடுத்தேன் என்றால் மறுநாள் காலை 10 மணிக்கு. முதல் தகவல் அறிக்கை இரவு 8 மணிக்கு பதிவாகி இருப்பதால் நான் தாமதமாக புகார் கொடுத்தேன் என்றால் இல்லை. எனது நண்பர் விஜில் ராஜ் கடல் தொழில் செய்கிறார். அவர் வீடு எனக்கு தெரியும். அந்த தேதியில் என் நண்பரை வீட்டிற்கு விடாமல் எதற்காக இறக்கி விட்டேன் என்றால் அவர் வீடு பக்கத்தில் இருப்பதாகவும் செல்கிறேன் என்று சொன்னதாலும் இறக்கி விட்டேன். புகாரில் ஊர் பருத்தி விளை என்று சொன்னேன் என்றால் ஆமாம். முதல் விசாரணையில் பருத்தி விளை என்று சொல்லவி்ல்லை என்றால் சொல்லியிருக்கிறேன். என் வீட்டிற்கு பின்பு தான் காவல் நிலையம் என்றால் தூரம் தரியவில்லை 5 நிமிடத்தில் சென்று விடலாம். நான் விடுமுறைக்கு வரும் பொழுது என் நண்பரை சென்று பார்ப்பது வழக்கம் என்றால் ஆமாம். சம்பவம் நடந்த இடம் எந்த பகுதி என்று குறிப்பிட்டு சொல்ல முடியாது என்றால் அந்த இடம் புன்னைமேடு என்று தான் சொல்வார்கள். சம்பவம் நடந்த நேரம் இரவு 9 மணி என்றால் ஆமாம். அந்த இடம் ஆட்கள் நிறைந்த இடம் என்றால் இருக்கும். புகார் மனுவில் எதிரிகள் பெயர் குறிப்பிட்டு சொல்லவி்ல்லை என்றால், சொல்லியிருக்கிறேன். நான் பெயரை எப்படி சேர்த்தேன் என்றால் நான் கொடுத்த புகாரின் அடிப்படையில் காவல் நிலையத்தில் எதிரிகளை பிடித்து பெயர் சொன்னார்கள். எனக்கும் என் நண்பருக்கும் மது அருந்தும் பழக்கம்

உண்டு என்றால், இல்லை. அதனால் தான் நானும் நண்பரும் அந்த இடத்தில் மது அருந்திய காரணத்தால் தான் நண்பரை கொண்டு அவரது வீட்டில் விடவில்லை என்றால் சரியல்ல. 5 வது எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து சரியென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையெழுத்துச் செய்தார்.

சார்பு நீதிபதி,
**இரணியல்.**